alert than in other places. The machinery itself is wanting, to give proper shape to the measure. And I cannot help saying that we shall be laying the flattering unction unto our soul if we imagine that the moment we pass the Bill, necessary steps would be taken to implement the provisions. Only yesterday I was perusing the series of Bills passed by the Legislature during the successive regimes. Many of these are dead letters to-day. My hon. Friend Mr. Balasubramanya Ayyar referred to smoking by children and the Hon. Minister said that banning of juvenile smoking was difficult of enforcement. May I remind him that though this House solemnly passed the Bill prohibiting smoking in cinema houses, yet—I do not go to cinema houses but many friends tell me—smoking is the commonest form of enjoyment in cinema houses? That is the fate of legislative measures we are passing. I am, therefore, very pessimistic about our capacity to enforce the provisions of this Bill, even to the extent to which they can be enforced in certain cases. Apart from that, the question of child delinquency is a world problem. It is not peculiar to our country. In other parts of the world, it has become far more serious than it is in this country. I may tell you, in spite of all that you say about child delinquency, there is still some hope. Of course, all of us have to put our hearts to it and take active steps to save ourselves. Sir, two or three years ago, a committee was appointed to investigate the condition of child delinquency in the United States of America. It was a growing evil there and was threatening the whole society. Even now, I believe, it is threatening the whole society. This committee reported that the chief cause of child delinquency was the absence of care of the child in the earlier years due to the system of both husband and wife seeking employment with no members of the family at home to take care of the child. There is a sort of tradition in the West and my Friend Mrs. Clubwala Jadhav will bear me out. There are what are called baby sitters. It is an occupation by itself. That is, people are employed to sit with babies and are paid one dollar for every three hours of sitting. That is the position in the so-called civilized countries of the world. Therefore, this committee reported that the most important thing to do was to see that the conditions that were prevalent in olden days should be brought about again. Those conditions were that the grand-parents of the child lived with the child and looked after it. And it is the grand-parents more than the parents and anybody else that teach the children proper habits with the care and love necessary and, at the same time, prevent them from taking to these delinquent habits. We are moving rapidly—I do not know if we have already moved—towards a socialistic pattern of society which means many things, one of them being the disruption of home life. Therefore, there is a fundamental gap in the ideology of the Nation as to what are the things that are to be considered essential and what are not essential things. This is not the occasion for me to go into that question but I do feel that the fundamentals of child delinquency have not been grasped by many of us. They do not certainly find an echo in this particular Bill.

[Dr. A. Lakshmanaswami Mudaliar] [10th September 1958

Sir, I was in England recently when this awful thing was going on. There are 'Teddy boys', as they are called, of ages beween twelve and fourteen. They are going in for crimes of a nature which one cannot possibly imagine at that tender age. Why has it come about? It is because children are not cared for, are not educated and are left to look after themselves. When a group of such children join, whether they are four years or fourteen years old, the first thing they develop is a certain amount of, what they call, sternness. You may ask any Psychologist and you will know that this is a psychological factor. They develop sternness or what they call manliness and practise some provocative method of attacks by which they think they can justify nature. This is going on to such an extent that not only the boys but the girls
4-50 p.m. also have taken to it. And, Sir, when girls take to anything, they beat the boys hollow. That is the experience all over the world. I believe it won't be the experience under Indian conditions.

Now, whatever one might say about the various provisions of the Bill, they are more in the nature of punitive measures than in the nature of preventive measures. Proper care of the children is in the direction of adopting preventive measures. For this purpose there are a large number of well-known theories, and there are people who are known as psychiatrists. The psychiatrist does not find any place in the measures that have been thought of to deal with juvenile delinquency. There is no use of asking organizations to look after the children. I am a little dreadful and frightened about these organizations. There are very many excellent organizations, no doubt. Let me not create the impression that I do not realise the good work done by some of these organizations. But the Government will have to be very careful in recognizing these after-care organizations as they have promised in clause 22 of the Bill. When they say 'Government', I do not know who the person responsible for recognizing these organizations will be. It is like the definition of 'some person' referred to by my hon. Friend Sri K. Balasubramanya Ayyar. It may be some person; which person nobody knows. It is a vague thing indeed to recognize these organizations and to give these organizations the duty of looking after the children whose conduct in the approved schools requires their being placed on probation or whose rehabilitation, on discharge from approved schools, requires further attention, or such other children, as in the opinion of the State Government, require to be kept in suitable custody. I do not know how the State Government can come to any opinion in individual cases. It must be the responsibility of the court. The State Government must accept the verdict of the court. The State Government cannot come into the picture. The State Government is a lifeless thing. Some people call it a soulless body. I will not go so far. But certainly it is not a body which can be in regular touch with, what may be called, the real pulse of the nation or the pupils that have to be looked after.

10th September 1958] [Dr. A. Lakshmanaswami Mudaliar]

Sir, though I have said this, all that I want to point out is that a measure of this nature will not bear much fruit unless certain essential steps are taken. What are they? First and foremost, the children should be employed in some sort of—I do not say 'business'—work. Get them to the schools, put them there, make them work for long periods and train them. Sir, when I was in Toronto, a gentleman, who was a Russian by birth and had settled in the United States, gave an excellent description of the Soviet system of education. Many people admire the Soviet system of Government and, in fact, I am told that something in everything is much better in Soviet Russia than anywhere else. Being a chronic disbeliever of many things, I do not take them as easily as people want me to take them. But there is no doubt at all that the system of education in Russia—although it is a State-controlled and regulated system—is one which employs the children in a useful way to such an extent that the child has little time to dissipate its energies in other ways. You must have education spread throughout. You must have playgrounds for children. You must get them to play and see that they get themselves tired by such play. You have done nothing of the kind. We pick up children in the streets and say that either they are delinquents or that they are juvenile offenders. That is not the proper psychological approach to tackle the problem of juvenile delinquency. It is a very difficult thing, I realise, to give them that sort of suitable occupation which will make them feel that they are being looked after, that they are being educated and that they are being trained in a healthy manner to prove themselves worthy citizens.

Now, Sir, crime, juvenile delinquency and such other unfortunate trends will be there in some measure or other. There is no doubt that we cannot make the whole nation overnight adopt higher standards of moral rectitude. But a nation, which does not prepare itself to see that the children are looked after, that they are brought up in such a way that their wants are fulfilled and that they are given the exercise that is necessary for keeping their minds and bodies healthy, can never hope to reach the level which would provide even the minimum amount of efficiency required by that nation. Where are the facts that these things are being done so that we may depend on them to become useful citizens? Sir, starvation is existing to such an extent that to-day unfortunately in Delhi, it is common complaint that it is the South Indian vagrants that are committing more simple crimes than other people. We are earning a bad name indeed. And, unfortunately, we cannot afford to say anything in contradiction to that because the facts speak for themselves. It is necessary, therefore, for us—besides passing all these measures, which, I say with all the good intentions of the Government and of the Joint Select Committee, will not go far—to take up the whole question and see in what way and to what extent it is possible for us with the help of the Government and the co-operation of private agencies that are already at work to take proper care of these young children. To put them in an

[Dr. A. Lakshmanaswami Mudaliar] [10th September 1958

after-care institution or a Senior or Junior Certified School may look all right. But I know, because of my knowledge of these certified schools, that more crimes are committed in the certified schools than people generally imagine. There are dangers even in putting these children in the certified schools. There are dangers in putting a large number of delinquent children together. Isolation, personal attention, treatment by a psychiatrist to discover what the hidden emotions of the children are and how best to remove those emotions—very often it is due to a suppressed emotion due to some unfortunate incident with the parents or others that these young children turn delinquents—this is the sort of thing that has got to be done. I realize the enormity of the problem that awaits us, especially in a country where the population is growing at such a tremendous rate. But, at the same time, let us not go away, as I said, with the impression, the false impression that this Bill would solve the problem of juvenile delinquency.

DEPUTY CHAIRMAN : There are six more hon. Members who have expressed their desire to speak on this Bill. I would, therefore, request hon. Members to take only five minutes each.

*SRI A. GAJAPATHY NAYAGAR : மன்றத் தலைவர் அவர்களே, சென்னை குழந்தைகளைப்பற்றிய சட்டம் 1920-ம் ஆண்டு இயற்றப்பட்டதை 38 வருஷங்களுக்குப் பிறபட்டாவது திருத்த வேண்டிய நிலை வருகிறது என்றால், அதனுடைய ஒரு உண்மையையும் அதனுடைய நேர்மையையும் செய்ய வேண்டிய கடமையையும் அறிந்த அமைச்சர் அவர்களை நான் பாராட்டுகிறேன்.

இதுகாறும் பேசிய நண்பர்கள் குழந்தைகளைக் காப்பாற்றுவதைப்பற்றியும் குழந்தைகளை வளர்ப்பதுபற்றியும் பேசினார்கள். இவைகள் எல்லாவற்றையும் ஒரு திருக்குறளில் அமைத்து விடலாம்.

" தக்கார் தகவிலர் என்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்."

என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். ஒரு தேசத்திலுள்ள தாய் தந்தையர்கள், (குலத்) தலைவர்கள், ராஜாங்கம் எல்லாம் எப்படி மதிக்கப்படுகிறது என்பது அந்த தேசத்தின் குழந்தைகளைப் பொறுத்தது. ஆகையால் குழந்தைகளை வளர்க்க வேண்டிய விதத்தில் நமக்கு எவ்வளவு பொறுப்பும் கடமையும் இருக்கிறது என்பதை நாம் யோசிக்கவேண்டும். என்னென்ன வழிகளில் குழந்தைகளை நாம் பராமரித்து அவைகளை முன்னுக்குக் கொண்டுவரவேண்டும் என்பதை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பேசிய திருவள்ளுவர் வற்புறுத்தியிருக்கிறார் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

அனாதைக் குழந்தைகள் செய்யும் கொடுமைகள் சொல்லவொண்ணாதது. இப்பொழுதும் கூட சீன தேசத்தில் இரவு எட்டு மணிக்கு மேல் வீதியில் செல்வானாகில் பத்து வயதுச் சிறுவன் கூட வழிப்பறியும் கொலையும் செய்யும் அளவுக்கு இருப்பதைக் காண முடியும். அது இப்பொழுதும் நடந்து வருகிறது. ஆகவே, குழந்தைகளை வளர்ப்பதில், அவர்களைச் சரியாகக் கண்காணிக்க வேண்டும். அநேகம் அங்கத்தினர்கள் சொன்னபடி அதை நல்ல விதமாகச் செய்வார்களென்று நினைக்கிறேன்.

நான் அதிகமாகச் சொல்ல விரும்பாவிட்டாலும், ஒன்று மட்டும் சொல்ல விரும்புகிறேன். 12-வது பிரிவில் 3-வது கட்டத்தில் "Any Police Officer or other person authorized by the State Government in this behalf may bring before a court any person apparently of the age of sixteen years" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே ஒரு

10th September 1958] [Sri A. Gajapathy Nayagar]

விளக்கம் தரவேண்டும். சட்டப்படி போலீஸ் அதிகாரிகளுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள். "**Or other person authorized by the State Government**" என்றால் அவர்கள் எவ்வாறாக இருக்க வேண்டும், அவர்களுடைய கருத்து என்ன, இதைப்பற்றி விளக்கம் சொல்ல கனம் அமைச்சர் அவர்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.

இரண்டாவதாகச் சொல்ல வேண்டியது என்னவென்றால், 36-வது "பி" பிரிவின்படி, யார் வசம் குழந்தைகள் இருக்கின்றனவோ அவர்கள் அந்தக் குழந்தைகளைப் பிச்சை எடுக்கச் செய்வார்களானால், அவர்களுக்குத் தண்டனை ஒரு வருஷச் சிறைவாசம் அல்லது அபராதம் 300 ரூபாய் வரைக்கும் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. குழந்தைகளைப் பிச்சை எடுக்கச் செய்கிறவர்களுக்கு இவ்வளவு பெரிய தண்டனை கொடுக்கத்தான் வேண்டும். அதைக் குறைக்க வேண்டும் என்று சொல்லவில்லை. ஆனால் 36 "சி" பிரிவின்படி அதே குழந்தைகளை, சாராயம், போதை வஸ்துக்கள் முதலியவைகளை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டு செல்வதற்கு உபயோகப்படுத்தினால், அந்தக் குற்றத்திற்கு அபராதம் மாத்திரம் தான் என்று கண்டிருக்கிறது. குழந்தைகளைப் பிச்சை எடுப்பதற்குப் பயன்படுத்திய குற்றத்திற்கு ஒரு ஆண்டு சிறைவாசம் என்று இருக்கும் போது, அதே குழந்தைகளைச் சாராயம், போதை வஸ்துக்களைக் கொண்டு போகப் பயன்படுத்தினால் அபராதம் மட்டும்தான் என்று இருக்கிறது. தண்டனை விதிப்பதில் ஒரு ஒழுங்கு இருக்க வேண்டும். ஆகவே இதற்கும் கண்டிப்பாக தண்டனையை உயர்த்த வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கடைசியாக, ஒன்று மட்டும் சொல்ல விரும்புகிறேன். நாம் எல்லோரும் சேர்ந்து குழந்தைகளை நல்ல வழியில் கொண்டு வரவேண்டியது அவசியம். அரசாங்கம் ஐந்து வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளை மாத்திரம் கண்காணித்தால் போதாது. ரஷியாவில் ஒரு குழந்தை பிறந்த மாத்திரத்திலே அது நாட்டின் குழந்தையாக வந்துவிடுகிறது. தாய்மார்கள் பிரசவத்திற்கு முன்பும் பிரசவத்திற்குப் பின்பும் கவனித்துக்கொள்ளப்படுகிறார்கள். ஒரு ரஷிய தேசத்துக் குழந்தை என்றால் அது பருமனாகவும் பளுவாகவும் இருக்கிறது. அவர்களுடைய தேசத்துக் குழந்தைகளைப் போன்ற பளுவான குழந்தைகள் வேறு எந்த தேசத்திலும் இல்லை. குழந்தைகள் ஐந்தாண்டுகளுக்குள்ளேயே கவனிக்கப்பட்டால்தான் அவைகளின் உடல் உணர்வும் சக்தியும் பெறுகிறது. ஐந்து வயதுக்குப் பிற்பட்டு அவைகளை எப்படிக் கண்காணித்தாலும் அதனால் பெரிய பலன் ஏற்பட்டு விடுவதில்லை. 5p.m.
இப்பொழுது அரசியலார் கர்ப்பத்தடைக் கொள்கையைக் கடைப்பிடித்தாலும் பிறந்த குழந்தைகளை நன்றாகக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு இருக்கிறது. ஐந்து வயது வரைக்கும் உள்ள குழந்தைகளை நாட்டுக் குழந்தைகளாகப் பாவிக்க வேண்டுமென்ற கருத்தை வைத்துக்கொண்டு, அதற்கும் சில விதிகளை அமைத்தால் இந்தச் சட்டம் பயன் படும் என்று சொல்லிக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI O. P. RAMASWAMI REDDIAR: டிபுடி சேர்மன் ஸார், குற்றம் செய்யும் குழந்தைகளையும் அனாதையாகத் தெருக்களில் விடப்படும் குழந்தைகளையும் பராமரிப்பதற்கு நிலையங்களை ஏற்படுத்தி அவை மூலமாக அவர்களைப் பராமரிப்பதற்கு இப்பொழுது சட்டம் செய்ய முன்வந்திருப்பதை நான் பாராட்டுகிறேன். ஆனால், குழந்தைகள் நன்றாக நடத்தப்பட வேண்டுமென்றால், குழந்தைகள் மாத்திரம் குற்றம் செய்கிறது என்கிற முறையில், நாம் அதற்குச் சட்டம் செய்து விட்டால் போதாது. குழந்தைகள் குற்றம் ஏன் செய்கின்றன ? பெரியவர்கள் குடும்பங்களில் நல்ல முறையில் தங்களுடைய வாழ்க்கையை நடத்த முற்படுவதில்லை. அதைப் பார்த்துத்தான் குழந்தைகள் தவறுதல்கள் செய்கின்றன.

தனி மனிதனாக இருந்தாலும், குடும்பமாக இருந்தாலும், சமூகமாக இருந்தாலும், ஒவ்வொருவரும் எந்த முறையில் நடந்துகொள்ள வேண்டும், தங்களுடைய வாழ்க்கையை எந்த முறையில் நடத்த வேண்டும்

என்று சிந்தித்துத் தங்களுடைய வாழ்க்கையை நல்ல முறையில் நடத்த வேண்டும். அப்படி நடத்துவது தங்களுக்கு மட்டும் அல்ல, மற்றவர்களுக்கும் அது வழி காட்டியாக இருக்க வேண்டும். அந்தக் குடும்பங்கள் தங்களுடைய வாழ்க்கையை தாங்கள் நினைத்தபடி நடத்துவதால்தான் இந்தமாதிரியான குற்றங்கள் நடைபெறுகின்றன. பெரியவர்களிடத்தில் தான் அதிகப்படியான குற்றம் இருக்கிறது. வருஷா வருஷம் கிரிமினல் கேஸ்கள், சிவில் கேஸ்கள் எவ்வளவு அதிகமாகிக்கொண்டு வருகின்றன என்பதைப் பார்க்கும்போது, எவ்வளவு குற்றங்கள் செய்யப்படுகின்றன என்பது நமக்குத் தெரிய வருகிறது. இப்பொழுது எத்தனை பேர்கள் கோர்ட்டு முன்னதாக வருகிறார்கள் என்பதைப் பார்த்தால், அதிகமாக வருவது தெரியும். இப்படி எவ்வளவு பேர்கள் வருகிறார்கள் என்டதைப் பார்த்தால், குற்றங்கள் அதிகமாக வருவதையும் எந்த முறையில் தங்களுடைய வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கிறார்கள், நடந்துகொண்டு வருகிறது என்பதையும் நாம் எல்லோரும் பார்க்கலாம். நல்ல முறையில் இவர்கள் தங்களுடைய வாழ்க்கையை நடத்துவதற்கு ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டும். பெரியவர்கள் நல்ல முறையில் தங்களுடைய வாழ்க்கையை நடத்த முன்வர வேண்டும். பெரிய குடும்பங்கள் தனிக் குடும்பங்கள் தர்மங்களை எடுத்துப் பார்த்து நல்ல முறையில் தங்களுடைய வாழ்க்கையை நடத்துவதற்கு முன்வர வேண்டும். முன் காலத்தில் அப்படித்தான் பெரியவர்கள் தங்களுடைய வாழ்க்கையை நடத்திக்கொண்டு வந்தார்கள். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வந்தன. பழைய காலத்தில் இப்படிப்பட்ட காரியங்களைத் தனிப்பட்ட மனிதர்களும், குடும்பங்களும், சமூகமும், அரசாங்கமும், மடாதிபதிகளும், மற்றவர்களும் செய்துகொண்டு வந்தார்கள். அவைகள் எல்லாம் இப்பொழுது நின்று போய்விட்டன. ஆதலாலே, அடிப்படையை நாம் முதலிலே செப்பனிட வேண்டும். இந்தச் சட்டம் செய்யப்படுவதுடன் கூட, ஹிந்து மத பரிபாலன போர்டு சட்டத்தையும் தகுந்த முறையிலே திருத்தியாக வேண்டும். அதன் மூலமாகப் பெரியவர்களும் தங்களுடைய வாழ்க்கையை நன்றாக நடத்தப் பிரசாரம் செய்வதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

அது மட்டுமல்ல. வறுமையினால் குற்றவாளிகளாக ஆகிறார்களே, அவர்களுக்கு ஒழுக்கத்தையும் சீலத்தையும் கற்பிக்கும்படியான முறையிலேயும் தகுந்த ஏற்பாடுகள் இல்லை. ஏதோ இங்குமங்கும் ராமகிருஷ்ண மிஷன் ஏற்பாடுகள் செய்கிறார்கள், மற்ற மதஸ்தர்கள் செய்கிறார்கள். ஆனால், அவை அதிகமாக இல்லை. அதற்கும் ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டும். ஏனென்றால், குழந்தைகள் மாத்திரம் தவறுகள் செய்கின்றன என்று நாம் நினைத்துக்கொண்டு பெரியவர்கள் தவறுகள் அதிகமாகச் செய்வதை நாம் கண்காணிக்காமல், கவனிக்காமல், தகுந்த முறையிலே அவர்களுக்கு தர்மத்தைப் போதிக்காமல் இருந்தால், நாட்டினுடைய நிலைமை நாளாவட்டத்தில் சீர்கேடுதான் அடையும். ஆகையால், ஒழுக்கம் கடவுள் பக்தி அடிப்படையில் வாழ்க்கையை எப்படி நடத்த வேண்டும், கடமையை எப்படிச் செய்ய வேண்டுமென்பதை மக்களுக்கு எடுத்துக் காட்ட அரசாங்கம் கடமைப்பட்டிருக்கிறது. அரசாங்கம் அதை உணருவதில்லை, இந்தக் காலத்திலே. ஆகையால்தான் இந்தத் தொந்தரவு.

பழைய காலத்தில் தனி மனிதனும், சமூகமும் எப்படி நடக்க வேண்டுமென்பதில் வழி காட்டுவதற்குத் தகுந்த ஸ்தாபனங்களும் தனி மனிதர்களும் இருந்தார்கள். பிரம்மச்சரியம், கிரஹஸ்தாசிரமம், வானப்ரஸ்தம், சந்யாசம் முதலிய நிலைகள் படிப்படியாக ஒருவனுக்கு அமைக்கப்பட்டிருந்தன. தனி மனிதர்களும், மதஸ்தர்களும் இந்த வழியில் மக்கள் நடப்பதற்கு வழிகாட்டி வந்திருந்தார்கள். அதனால் அந்தக் காலத்தில் நம்முடைய வாழ்க்கை நன்றாக நடத்தப்பட்டு வந்தது. மடாசிபதிகளும், பெரியவர்களும், மதஸ்தர்களும் அதற்குத் தகுந்த முறையில் மக்களை அவ்வப்போது திருத்திக்கொண்டு வந்தார்கள். தனி மனிதன் தன்னுடைய வாழ்க்கையில் முதலில் பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடித்து, அதில் பயிற்சி அடைந்து, பிறகு கிருகஸ்தாசிரமத்தில் பிரவேசித்து, அதிலும்

நல்ல வாழ்க்கை நடத்தி, அதைக் கடந்து கடவுளைப்பற்றிச் சிந்திக்க வேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டு, வானப்ரஸ்தம், சந்யாசம் ஆகிய ஆசிரமங்களில் இருந்து வந்தார்கள். அதெல்லாம் இப்பொழுது போய் விட்டது. ஆகையால்தான், அடிப்படைத் தத்துவத்தை நாம் திரும்பவும் அறிவுறுத்தி, தகுந்த முறையில் ஏதாவது செய்யாமற்போனால் இம் மாதிரி ஆயிரக்கணக்கான சட்டங்களைத்தான் நாம் செய்துகொண்டிருக்க வேண்டும். நான் முதலமைச்சராக இருந்தபோது செய்த சட்டங்கள் எனக்கே தெரியும். எந்த அமைச்சருக்கும், எந்தச் சட்ட நிபுணருக்கும், என்ன சட்டம் என்று தெரியாத அளவில், சட்டங்கள் அதி கரித்துக் கொண்டிருக்கின்றன. எத்தனையோ சட்டங்கள் செய்துகொண்டு வருகிறோம். எங்கே அதிகமாகச் சட்டங்கள் செய்கிறோமோ, அங்கே ஜனங் கள் நன்றாக வாழ்க்கை நடத்தவில்லை என்பதைத்தான் அது சுட்டிக் காட்டுகிறது.

ஜனங்கள் தங்களுடைய பொறி புலன்களை அடக்கி, தகுந்த முறையில் சமூகமும் தனி மனிதனும் வாழ்க்கை நடத்தும் முறையில் இருக்க வேண்டும். சட்டம் எப்பொழுது வரும்? எப்போதைக்கப்போது தவறுதல் ஏற்படுகிறதோ அப்பொழுதுதான் சட்டம் வரும். ஆதலால், அந்த நிலை மாறாவிட்டால் நாம் முன்னேற முடியாது.

இந்த நாட்டில் வறுமை அதிகமாக இருக்கிறது, அறியாமை அதிகமாக இருக்கிறது, ஆதரிப்போர் இல்லாமல் குழந்தைகள் அநேகமாக ஏழ்மையில் இருக்கிறார்கள். அது மாத்திரமல்ல. தாயோ தந்தையோ இறந்துவிட்டால் அவர்கள் விட்டுச் சென்ற குழந்தைகளைப் பராமரிப்பதற்கும் தகுந்த முறையிலே குழந்தைகளைக் கவனிப்பதற்கும், தகுந்த முறையிலே தனி மனிதனும் இல்லை, சமூகமும் இல்லை. அரசாங்கம் மாத்திரம் இதற்குச் சட்டம் செய்தால் போதாது. ஆகையால், தனி மனிதனும் சமூகமும் அரசாங்கமும் சேர்ந்து இதையெல்லாம் செய்யவேண்டும். அப்படிச் செய்யாமல், சட்டங்களை மாத்திரம் செய்துகொண்டுபோனால், நடைமுறை யில் அதிகத் தொந்தரவுகள், தொல்லைகள்தான் இருந்துகொண்டிருக்கும். ஆகையால், ஒவ்வொருவனும் தன் கடமையை உணர வேண்டும். குற்றம் புரிகின்ற குழந்தைகளை ஆதரிக்க வேண்டியது ஒவ்வொருவருடைய கடமை யாகும் என்பதைத் தனி மனிதனும் சமூகமும் உணரும்படி செய்தா லொழிய, இந்தச் சட்டங்களின் மூலம் நாம் மேல்பூச்சாக எவ்வளவுதான் செய்தாலும் பயன் இல்லை. ஆகையால், அடிப்படையான தத்துவங்களைப் புகுத்த நாம் தகுந்த முறையில் ஏற்பாடு செய்ய வேண்டும். அந்தந்த மதஸ்தர்கள் மூலமாகவோ, சமூக ஸ்தாபனங்கள் மூலமாகவோ இதைச் செய்ய வேண்டும்.

இம்மாதிரி நிலையில் லட்சக்கணக்கான குழந்தைகள் நம் நாட்டில் இருக்கின்றார்கள். நாம் இங்குமங்கும் ஏதோ செய்ய வேண்டுமென்று ஆரம்பித்திருக்கிறோமே தவிர, இந்தப் பிரச்னையை மொத்தமாக எடுத்துக் கொண்டு தீர்வு காணும் முறையில் ஒன்றும் செய்யவில்லை. இப்பொழுது 5-10 p.m.
எத்தனை குழந்தைகள், எங்கெங்கே இருக்கின்றார்கள் என்பதற்கான சர்வே செய்து, புள்ளி விவரங்கள் எடுத்தால், உண்மை நிலை தெரியும். ப்ளாக் டெவலப்மெண்ட் ஆங்காங்கே நடைபெறுகிறது. எல்லா ஊர் களிலும் நிறைய உத்தியோகஸ்தர்களை, எவ்வளவு பேரை "அப்பாயிண்ட்" செய்ய வேண்டுமோ அதைவிட அதிகமாக, "அப்பாயிண்ட்" செய்திருக் கிறோம். அவர்களைக்கொண்டு, நான்கைந்து மாதங்களிலே இந்த சர்வே செய்து முடித்துவிடலாம். எந்தெந்த கிராமத்தில், எந்தெந்த நகரத்தில் பிச்சை எடுக்கும் நிலையில் எத்தனை எத்தனை அனாதைக் குழந்தைகள் இருக்கிறார்கள், ஆதரவற்ற கைம்பெண்கள் இருக்கிறார்கள், அவர்களுக்கு உதவி செய்ய வேண்டிய கடமை சமூகத்திற்கு எவ்வளவு இருக்கிறது என்பதைச் சமூகம் அறிந்துகொள்வதற்காகவாவது இதைச் செய்ய வேண் டும். இந்தப் பொறுப்பைச் சமூகமும் அரசாங்கமும் நிறைவேற்ற முடி யுமோ, முடியாதோ, அதைப்பற்றித் தெரியாது. ஆனாலும், இது விஷ யத்தில் சமூகத்தினுடைய பொறுப்பு எந்த அளவுக்கு இருக்கிறது

[Sri O. P. Ramaswami Reddiar] [10th September 1958

என்பதைத் தெரிந்துகொள்வதற்காகவாவது, இத்தகைய சர்வே நடத்தி, எல்லோரும் தங்களுடைய கடமையை உணரும்படி செய்ய வேண்டும். அதன் பிறகு, தனி மனிதன், சமூகம் முன்வந்து, எவ்வளவு தூரம் அவர்களைப் பராமரிப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்பதை அரசாங்கமும் உணரும். அரசாங்கமும் தங்களால் முடிந்ததைச் செய்ய முடியும். ஆகையால், அந்த முறையிலே ஆரம்பித்தாலொழிய, பிரச்னை என்ன என்பதையும், அதன் அளவு என்ன என்பதையும்கூட தெரிந்துகொள்ளாத நிலைமையில் தான் நாம் இருப்போம். எனக்குத் தெரியும். இன்னும் என்னுடைய குருகுலம் சரியான முறையில் ஆரம்பிக்கப்படவில்லை. ஆனால், அதற்குள்ளாக எத்தனை ஆதரவற்ற குழந்தைகள் வருகிறார்கள், ஆதரவற்ற கைம்பெண்கள் வருகிறார்கள் என்பதை நான் பார்க்கின்றேன். குழந்தைகளைப் பராமரிக்கக்கூட முடியாத நிலையில் தாய் தந்தையர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய குழந்தைகளுக்குச் சாப்பாடு போடக்கூட முடியாமல் இருக்கிறதென்பதைப் பார்க்கும்போது, ரொம்பவும் கஷ்டமாக இருக்கிறது. அப்படி வருகிறவர்களில் நூற்றுக்கு 95 பேர் ரொம்ப ஏழ்மை நிலையில் இருப்பதால், இந்தப் பிரச்னையைச் சமாளிப்பது ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது.

பராமரிப்பற்ற குழந்தைகளையும், ஆதரவற்ற கைம்பெண்களையும், மற்றவர்களையும் தகுந்த முறையில் பரிபாலிக்க வேண்டுமென்றால், அதற்கு இம்மாதிரிச் சட்டங்கள் மூலமாகவும் ஸ்தாபனங்கள் மூலமாகவும் ஏற்பாடு செய்வது தவிர, அவர்கள் அதில் பயிற்சி அடைந்த பிற்பாடு அவர்களை வெளியே விட்டு விட்டால் அவர்களுக்கு எங்கே வேலை இருக்கும் என்பதையும் நாம் கவனிக்க வேண்டியதாக இருக்கிறது. இவர்களுக்கு தர்மத்தையும் ஒழுக்கத்தையும் கடவுள் பக்தியையும் தொழிலையும்பற்றி பயிற்சி கொடுத்து அதன் பிறகு அவர்களுக்கு வேலை எங்கே இருக்கிறதென்பதையும் நாம் கவனித்தாலொழிய திரும்பவும் பழைய நிலைமைதான் வரும். அவர்களுக்கு வசதி இல்லையென்றால் அவர்கள் பல இன்னல்களுக்கு உட்பட்டு, பழையபடி தெருவிலே போகும்படியான நிலையில்தான் அவர்களை சமூகமும் சந்தர்ப்பமும் வைக்கிறது என்று சொல்ல வேண்டும். அவர்களை ஏதோ 20 முதல் 22 வயது வரையில் பராமரித்துவிட்டு, அதன் பிறகு அவர்களை வெளியே விட்டுவிட்டால், அவர்களுக்கு என்ன வசதி இருக்கிறது, சமூகம் எந்தத் துறையிலே அவர்களுக்கு வசதி அளிக்கிறது என்று பார்க்க வேண்டும். இன்னும் தனி மனிதன் எந்த முறையிலே வசதி கொடுக்க முடியும், ஸ்தாபனம் எவ்வளவு கொடுக்க முடியும், அரசாங்கம் எவ்வளவு தூரம் கொடுக்க முடியும், இதையெல்லாம் பார்க்க வேண்டும். சரியான முறையிலே இதை எப்படி நடத்த முடியும் என்பதைப்பற்றி அடிக்கடி சிந்தையிலே தொந்தரவு பண்ணிக்கொண்டிருக்கிறேன். இதை அரசாங்கம் கவனித்து, இந்தச் சட்டத்தைச் செய்வதற்கு முயற்சி செய்திருக்கிறார்கள். இன்னும் மேலும் மேலும் அதிகமாகச் செய்வதற்குத் தனி மனிதனும், குடும்பமும், சமூகத்திற்கு என்ன செய்ய வேண்டும் என்பதைத் தெரிந்துகொள்வதற்கு சர்வே எடுக்க வேண்டும். எவ்வளவு தூரம் செய்ய வேண்டும் என்பதற்காகவாவது, முதலில் சர்வே எடுக்க வேண்டும் என்று சொல்கிறேன். அப்படி எடுத்தால்தான் நாம் செய்ய வேண்டிய பளு எவ்வளவு இருக்கிறதென்பதைத் தெரிந்துகொள்ள முடியும். கிராமங்களிலேயும் சர்வே எடுக்க வேண்டும். நகரங்களிலேயும் சர்வே எடுக்க வேண்டும். நகரங்களில்தான் கூக்குரல் அதிகமாக இருக்கிறது. எங்கே நாகரீகம் இருக்கிறதோ அங்கேதான் நரகமும் ஜாஸ்தி, அங்குதான் இழிவான செயல்களும் ஜாஸ்தி. குழந்தைகளைப் பலவிதத்திலேயும் உபயோகப்படுத்தும் பழக்கமும் இருந்துகொண்டு வருகிறது. மனிதன் மிருகமாய்க்கொண்டே போகிறான். நகரங்களுக்கு வந்தால் பிச்சை எடுக்கலாம், அங்கே பல துறைகளிலே வாழ்க்கை நடத்த முடியும் என்ற எண்ணத்துடன் கிராமத்தில் உள்ளவர்கள் நகரத்திற்கு வருகிறார்கள். அங்கே செல்வம் இருக்கிறது, அங்கே அதிக ஜனங்கள் இருக்கிறார்கள், அங்கே அதிகமான சந்தர்ப்பங்களும் (ஆப்பர்ட்ச்யூனிடிகள்) கிடைக்கும் என்றுதான் கிராமத்தவர்கள் நகரத்தை நோக்கி வந்துகொண்டிருக்கிறார்கள்.

10th September 1958] [Sri O. P. Ramaswami Reddiar]

இதையெல்லாம் கவனித்து, பொது ஜனங்களும் தனி மனிதனும் சமூக ஸ்தாபனங்களும் தக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்ளுகின்றேன்.

DEPUTY CHAIRMAN : The hon. Member can take only three minutes.

* DR. A. CHIDAMBARANATHAN : துணைத் தலைவர் அவர்களே, நான் காலத்தினுடைய அருமையை உணருவேன். ஆகையால், சுருக்கமாகச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

இந்த மசோதாவானது பிச்சைக்காரர்களுடைய தொல்லையை நீக்குவதற்கு ஏற்பட்டது அன்று என்பதை நான் நன்றாக உணருகிறேன். ஆனால், குழந்தைகளும் சிறுவர்களும் பிச்சைக்காரர்கள் ஆகிவிடக் கூடாது என்ற நோக்கத்திலேதான் இம்மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதையும் உணருகிறேன்.

ஆனால், குழந்தைகள் பிச்சைக்காரர்களாக உலவுகிறார்கள் என்ற கருத்தினாலே அவர்களைப் போலீஸ்காரர்கள் பிடித்து, சில நேரங்களிலே கோர்ட்டுக்கும் இழுத்து வீணாகத் தண்டனைக்கு ஆளாக்கிவிடுவார்களோ என்ற ஐயம் இருக்கிறது. அவ்வாறு சட்டத்தைச் செயற்படுத்தும்போது மிகவும் கவனமாகவும் எச்சரிக்கையாகவும் செயற்படுத்த வேண்டிய நிலைமை இருக்கிறது என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் நன்றாக அறிவார்கள். அதைப்பற்றி விளக்கமாக, தனியாக, போலீஸ்காரர்களுக்கு உத்தரவுகள், ஆணைகள் பிறப்பிக்கப்படும் என்று நான் நம்புகிறேன்.

மேனாடுகளில் பிச்சைக்காரர்களே இல்லை என்ற நம்பிக்கையில் சிலர் பேசினார்கள். மேனாடுகளில் பிச்சைக்காரர்கள் இல்லையென்றால், அங்கே எவ்வளவு தூரம் மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்ந்திருக்கிறது என்பதை நாம் கவனிக்க வேண்டும். வாழ்க்கைத்தரத்தை ஏதோ ஓரளவுக்குத்தான் நாம் உயர்த்திக்கொண்டு வருகிறபோது, பிச்சை யெடுக்கும் பிள்ளைகளைப் பிடித்து இழுத்துச் சிறையிலே வைப்போமா அல்லது வேறு இடத்திலே அடைத்து வைப்போமா என்பதை நாம் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த மசோதாவில் '16 வயதிலிருந்து 18 வயதுக்குட்பட்ட சிறு பையன்கள் கடன் வாங்கினால் குற்றம், அதன் காரணமாகக் கோர்ட்டுக்கு இழுக்கப்படலாம்' என்று ஒரு பிரிவு சொல்கிறது. பதினாறு வயதிலிருந்து 18 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் கடன் வாங்கினால், அதன் காரணமாக அவர்கள் கோர்ட்டுக்கு இழுக்கப்பட்டு தண்டிக்கப்படுவது என்றால், அது எவ்வளவு மோசமான நிலையாக இருக்கும் என்பதை நாம் சிந்திக்க வேண்டும். பிச்சை எடுப்பதை வேண்டுமானால் தடுக்க ஏதாவது செய்யலாம். ஆனால், பள்ளிக்கூடத்தில் படிக்கும் ஒரு சிறுவன் ஒன்று அல்லது இரண்டு ரூபாய் கடன் வாங்கினான் என்றால், அதைத் தன் தந்தையிடமிருந்து கேட்டுப் பெற்றுத் திருப்பிக் கொடுத்துவிடப் போகிறான். அப்படியிருக்கும்போது கடன் வாங்கினாலும் குற்றம் என்று சொல்வது அவ்வளவு சரியன்று. "Borrowing is an offence under this Bill." ஆதலினாலேதான், அதை விட்டுவிடுவதைப்பற்றி அரசாங்கம் சிந்திக்க வேண்டும். நான் தனியாக இதுபற்றித் திருத்தம் கொடுக்கவில்லையென்றாலும், இந்தச் சட்டத்தை நடைமுறையில் செயற்படுத்துகிறபோது மிக எச்சரிக்கையாகக் கவனம் செலுத்தி, வெகு ஜாக்கிரதையாக இருக்கும்படி பிரத்தியேகமான உத்தரவுகள் பிறப்பிக்குமாறு கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன்.

SRI M. SESHACHARIAR : Mr. Deputy Chairman, Sir, I want to refer to one or two matters only, as others have already spoken about other matters. In regard to criminal offences, it so happens that we have got to prove beyond reasonable doubt that

the offender has committed the crime. What happens in the juvenile courts in the mufassal—it may be otherwise in the courts in the Madras City—is this. There are only a Judge and the District Probation Officer and no one else. The Judge is the prosecutor as well as the defender. Actually the Probation Officers comes to the rescue of the child. Therefore, in the courts where there is an enquiry, there ought to be some kind of cross-examination. It may be that the instigator who has instigated the child to commit the crime may cleverly manoeuvre to put in his own witnesses before the court, there is no question of cross-examination arising there. Therefore, there must be a public defender. In that connection, we have suggested that the officers concerned should not wear robes, that there should be no prosecutor and that the Police also should not come in their uniforms.

The other matter that I wish to refer to relates to destitutes. We have to establish that a person is a destitute before we put him in the reformatory as we have got *habeas corpus* and other writs. It is for us to see that he is kept separate from other approved schools, as they would say. We are all anxious to see that they are kept separate. But there is no purpose in our keeping them along with the delinquents. It will surely accelerate the criminal propensities in the child. I would, therefore, submit, Sir, that we must surely keep them separate from the delinquents in the reformatory.

5-20 p.m.

The other thing that I would like to say is about the probation officer. I find that the probation officers are all anxious to do something in the matter. But the probation officers are not proficient enough to handle the matter. They are not competent; they are only a little educated. They are not capable of understanding the children and classifying them before they submit their reports to the courts. It so happens unfortunately in the case of criminal courts that the report of the probation officer is placed before the court even before a decision is given by the judge. An adverse report may turn the scales against the child. Therefore, we have to be wary in regard to this. What I would like to suggest is that the probation officers must be competent and proficient enough. One probation officer attends four or five courts in four or five taluks. He has to submit thirty or forty reports. We cannot expect all the reports to be clear and complete. They cannot be useful in any manner. I would suggest, therefore, that more probation officers should be appointed and that they must be proficient enough to understand the psychology of the child and also to suggest ways and means for rehabilitating the child.

***Sri B. K. NALLASWAMI :** மன்ற உதவித் தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் மீது பல அறிஞர்கள் பேசிவிட்டார்கள். எனக்குப் பேச சந்தர்ப்பம் இல்லை என்று நினைத்துக்கொண்டிருக்கிற சந்தர்ப்பத்திலே நான் அழைக்கப்பட்டிருக்கிறேன். இந்தச் சட்டத்தை அமுல் செய்வதில் கஷ்டங்கள் அதிகமாக இருக்கும் என்பதை நான் உணருகிறேன். நானும் சிறுவர்களைக் கொண்ட ஹாஸ்டலை நடத்திய அனுபவம் பெற்றிருக்கிறேன். கனம் அங்கத்தினர் ஸ்ரீமதி மஞ்சுபாஷிணி பேசும்போது எனக்குத் திகைப்பாக இருந்தது. மனோதத்துவ நிபுணர்களுக்கு இதில் இடம் கிடையாது

என்று அவர் சொல்லும்போது, எவ்வளவு தூரம் நம்முடைய இந்த மசோதா வெற்றிபெறும் என்பதிலே எனக்கு ஒரு பெரிய சந்தேகம் ஏற்பட்டது. ஏனென்றால் முன்னமே ஒரு அங்கத்தினர்

" தக்கார் தகவிலர் என்ப தவரவர்தம்
எச்சத்தாற் காணப்படும் "

என்ற குறளை மேற்கோள் காட்டினார். பெற்றோர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை அவர்களுடைய குழந்தைகளைக்கொண்டு அறியலாம் என்பதுதான் அதன் கருத்து. குழந்தைகள் வாழ்க்கை பெற்றோர்களுடைய வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருக்கிறது என்பதுதான் அந்தக் குறளின் ஆழ்ந்த கருத்து. குழந்தைகளின் சூழ்நிலை இன்று எப்படி இருக்கிறதோ அதை அனுசரித்துத்தான் அவர்கள் குற்றவாளி களாகவும் குறைபாடுள்ளவர்களாகவும் ஆகிக்கொண்டிருக்கிறார்கள் என்பது வெட்ட வெளிச்சமாகத் தெரிந்த விஷயம்.

சர்ட்டிபைட் ஸ்கூல்கள் நல்ல வேலை செய்கின்றன. ஆனால் டாக்டர் முதலியார் அவர்கள் சொன்னதுபோல் சர்ட்டிபைட் ஸ்கூல்கள் அவற்றில் செல்லக்கூடிய குழந்தைகள் இன்னும் புதிய குற்றங்களைக் கற்றுக்கொண்டு வரும் அளவிலே இன்று வரையில் இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். சிறை அனுபவம் எனக்கு ரொம்ப இருக் கிறது. சிறையில் இருக்கும்போது இதைப்பற்றியெல்லாம் மற்றக் கைதி களுடன் விவாதித்திருக்கிறேன். அந்த முறையிலே முதல் குற்றவாளிகளை இம்மாதிரிப் பள்ளிகளில் அனுப்புவது ரொம்ப ஆபத்தான விஷயம் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

தனிப்பட்ட நபர்கள் இந்தக் குழந்தைகளை எடுத்துக்கொண்டு சீர் திருத்துவதைப்பற்றி ஒரு அங்கத்தினரும் குறிப்பிடவில்லை. அங்கே அதிக கவனம் செலுத்தவில்லை என்றுதான் நான் கருதுகிறேன். முதல் குற்ற வாளிகளைத் தனிப்பட்ட நபர்களோ அல்லது ஆசிரமங்களோ எடுத்துக் கொண்டு திருத்த முன்வருவதுதான் உசிதமான விஷயம். ஸ்ரீமதி க்ளப்வாலா ஜாதவ் அவர்கள் கொடுத்திருக்கும் திருத்தத்தை நான் மிகவும் ஆதரிக்கிறேன். மனோ தத்துவ நிபுணர்கள் இல்லாத சமயத்தில் ஒரு தனி நபர் கோர்ட்டை வைத்துக்கொண்டிருக்கிறோம். இதைச் சிறிது கூர்ந்து கவனிக்க வேண்டும். ஒரு கோர்ட்டு மனோ தத்துவ சாஸ்திரியாக இருக்க முடியாது என்ற அடிப்படையை வைத்துக்கொண்டு பார்த்தால், நன்றாகப் பயிற்சி பெற்று, அந்தக் குழந்தைகளைச் சீர்திருத்துவதில் அனுபவம் பெற்ற ஒரு கமிட்டி இருந்து யோசனை சொல்வதுதான் சிறந்தது என்பதை யாரும் ஒப்புக்கொள்வார்கள். ஸ்ரீமதி ஜாதவ் அவர் கள் நினைப்பது போன்ற காரணத்திற்காக நான் அதை ஆதரிக்கவில்லை. கோர்ட்டு என்ற சொல்லால் குழந்தைகளுக்கு இழிவு ஏற்பட்டு விடும் என்ற காரணத்திற்காக அதை நான் ஆதரிக்கவில்லை. மனோ தத்துவ நிபுணர் கள் கிடைக்காத நிலையில் பயிற்சி பெற்ற ஒரு சிலரைக் கொண்டு கோர்ட்டுக்கு ஆலோசனை கூறி குழந்தைகளைத் திருத்துவதுபற்றி முடிவு செய்வது மிகவும் உபயோககரமாக இருக்கும் என்ற நிலையிலே அதை நான் ஆதரிக்கிறேன். வேறு காரணத்திற்காக நான் ஆதரிக்கிறேன் என் பதை மிகவும் பணிவுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த நிலையிலே நம்முடைய நாட்டில் மனோ தத்துவ சாஸ்திரிகள் குறைவு என்று கருதினால் அது தவறு. என்னுடைய அனுபவம் வேறு. நம்முடைய நாட்டில் யோகிகள் இருக்கிறார்கள். நம்முடைய மனதில் என்ன இருக்கிறது என்பதைக்கூடச் சொல்லக்கூடிய சந்நியாசிகளுடன் நான் பழகியிருக்கிறேன். நம்முடைய எண்ணங்கள், நம்முடைய பூர்வ சம்ஸ்காரங்களைக்கூட அறிந்துகொள்ளக்கூடிய சக்தியுடையவர்கள் இன் னும் நம் நாட்டில் குறைந்துவிடவில்லை. அவர்கள் போன்றவர்கள் இந்தப் பணியை எடுத்துக்கொண்டு நடத்தலாம். அரசாங்கம் இவர்களைப் பயன் படுத்திக்கொள்ள வேண்டும். நம்முடைய நாட்டில் மனோ தத்துவ சாஸ்திரிகள் இல்லை என்று கருதி டாக்டர்களையும் நிபுணர்களையும் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியதில்லை.

இது வரைக்கும் சர்க்கார் கடைப்பிடிக்கும் கொள்கை மடங்களிலோ தர்ம ஸ்தாபனங்களிலோ இந்த அனாதைக் குழந்தைகள் விடுதிகளை ஏற்படுத்திக்கொள்வதற்குத் தடையாக நம்முடைய சட்டங்களும் விதி முறைகளும் இருந்துகொண்டிருக்கின்றன. எங்களுடைய தாலூகாவில் ஒரு அனாதைக் குழந்தைகள் ஆசிரமம் ஏற்படுத்துவதற்கு ராஜாஜி அவர்கள் கால் கோலினார்கள். இப்பொழுது மூன்று வருஷமான பிறகும் கட்டடம் கூட எழுப்பப்படவில்லை. காரணம் ஒரு வேலையும் நடத்த முடியாத நிலையில் நம்முடைய எண்டோமெண்ட் சட்டங்கள் குறுக்கிடுகின்றன. ஆகையால், இவைகளையெல்லாம் திருத்தி, குழந்தைகள முதலில் அதிகமாகக் குற்றங்கள் செய்வதற்கு வழி இல்லாமல் செய்ய வேண்டும். அடுத்தபடி, குழந்தை பிச்சை எடுக்கக் கூடாது என்பது சரியல்ல என்று நான் கருதுகிறேன். பெரியவர்கள் பிச்சை எடுப்பதைப் பார்த்துக்கொண்டு சிறியவர்கள் இன்னது செய்கிறோம் என்று தெரியாமல் கை நீட்டிக் காசு வாங்கும் பழக்கத்தில் வந்துவிடுவதை நம்முடைய நாட்டில் தெருவில் பார்க்கிறோம். கையை நீட்டி காலணா அரையணா வாங்கும் பழக்கம் குழந்தைகளிடம் இருக்கிறது. பெற்றோர்களுக்குத் தெரியாமல் பிச்சை எடுக்கப் போகும் குழந்தைகளும் இருக்கிறார்கள்.

பிச்சை எடுப்பது என்று சொன்னால் உண்மையான சந்நியாசிகளுக்கு இடையூறு வந்துவிடும் என்று இன்னொரு அங்கத்தினர் சொன்னார். சந்நியாசிகளுக்கு ஒரு இடையூறும் வராது. உண்மையிலேயே மதுக்கரி பிச்சை எடுக்கும் உண்மை சந்நியாசிகளைப் பார்க்கும்போதே மக்கள் புரிந்துகொண்டு விடுவார்கள். இந்தச் சட்டம் பாலர்களுக்கானது. பதினெட்டு வயது பால சந்நியாசிகளை நான் பார்த்ததில்லை. அப்படிப்பட்டவர்கள் ரொம்பவும் அபூர்வம். பதினெட்டு வயதுக்குக் கீழ்ப்பட்ட சந்நியாசிகளுக்கு ஏதோ பாதகம் வந்துவிடும், ஆகையால் பிச்சை எடுப்பதைத் தடுக்கக் கூடாது என்று சொல்வதை நான் ஒப்புக்கொள்ளவில்லை. பிச்சை எடுப்பதைத் தடுக்கத்தான் வேண்டும். ஆனால் பெரியவர்கள் பிச்சை எடுப்பதைத் தடுக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். ஏனென்றால் பெரியவர்கள் செய்வதைப் பார்த்துத்தான் சிறியவர்களும் பிச்சை எடுக்கப் பழகிக்கொள்கிறார்கள். இதற்கு ஒரு உதாரணம் சொல்லலாம். பெரியவர்கள் பீடி அல்லது சிகரெட் குடித்து விட்டு எறிந்துவிட்ட துண்டுகளை எடுத்து சிறுவர்கள் குடிப்பதை நாம் பார்த்திருக்கிறோம். இம்மாதிரித்தான் பெரியவர்களுடைய பழக்கம் சிறுவர்களுக்கும் வந்துவிடுகிறது. ஆகையால் இதை அடிப்படையாக வைத்துக்கொண்டு நம் குழந்தைகளை ஆசிரமங்களில் நல்ல மனோ தத்துவம் தெரிந்த சந்நியாசிகளிடம் ஒப்படைப்பது குழந்தைகளுக்கு நன்மை பயக்கக்கூடும். இப்பொழுதும் ராம கிருஷ்ண மிஷன் போன்ற ஸ்தாபனங்கள் இப்பணியில் ஓரளவு ஈடுபட்டிருக்கின்றனர். அப்படிப்பட்ட ஆசிரமங்களுக்குக் குழந்தைகளை அனுப்புவதற்கும் அவைகளுக்கு வேண்டிய வசதிகளையும் சர்க்கார் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த மசோதாவை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்,

5-30 p.m. *THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்திலே கலந்துகொண்ட அங்கத்தினர்கள் அனைவருக்கும் முதன் முதலாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். குழந்தைகளைத் திருத்தும் விஷயத்தில், பராமரிக்கும் விஷயத்தில் எவ்வளவு கவனம் செலுத்த வேண்டும் என்பது கனம் அங்கத்தினர்கள் எல்லோராலும் வற்புறுத்தப்பட்டது. அது மிகவும் அவசியம் என்பதை நான் முதலிலேயே ஒப்புக்கொள்ளுகிறேன். இந்தச் சட்டம் செய்வதினாலேயே மட்டும் இந்த மகத்தான பிரச்னையை நாம் தீர்த்துவிட முடியாது என்பதை அரசாங்கமும் உணர்ந்துதான் இருக்கிறது. சட்டம் செய்துவிட்டால் மட்டும் கடமை தீர்ந்து போய்விடும் என்று அரசாங்கம் கருதவில்லை. ஆனால் சட்டத்தின் அடிப்படையில் சில உருப்படியான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றால் அதற்கு

10th September 1958] [Sri M. Bhaktavatsalam]

வேண்டிய அதிகாரம் வேண்டும், அதற்கு வேண்டிய சட்டம் வேண்டும். அந்த வகையில்தான் இந்த மசோதா பழைய சட்டத்தை மாற்றியமைக்கும் மசோதாவாக இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது.

மற்றொன்று, குற்றம் செய்தவர்களைத் தண்டிப்பது மட்டுமல்ல, குற்றம் செய்வதற்கு முன்னமேயே தடுப்பு நடவடிக்கைகள் அதாவது 'ப்ரிவெண்டிவ்' நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டியதும் அவசியம் என்பதை அரசாங்கம் நன்றாக உணர்ந்துதான் இருக்கிறது. குற்றம் செய்வதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளைச் சட்டத்தினால் எடுக்க முடியாது. அது பொது மக்கள் கையில் இருக்கிறது. முக்கியமாகக் குழந்தைகள் கெடுவதற்குக் காரணம் வறுமைதான் என்பதை ஒப்புக்கொள்ள முடியாது. ஏனென்றால் பெரிய பணக்காரக் குடும்பங்களிலுள்ள குழந்தைகளும் கெட்டுப்போவதை நாம் பார்க்கின்றோம். ஸ்ரீமான் ராமசாமி ரெட்டியார் அவர்கள் சொன்னதுபோல் குழந்தைகளைப் பெற்றோர்கள் கவனிக்காமல் இருப்பதும் அவர்கள் கெடுவதற்குக் காரணமாக அமைகிறது. பெரிய குடும்பங்களாக இருந்தாலும் ஏழைக் குடும்பங்களாக இருந்தாலும் பெரியவர்கள் கவனிப்பு இல்லாத காரணத்தால்தான் குழந்தைகள் பெரும்பாலும் கெட்டுவிடுகிறார்கள்.

பெற்றோர்கள் கவனிக்காத குழந்தைகளைத் தனி நபரிடம் விட வேண்டும் என்று கனம் அங்கத்தினர் ஒருவர் சொன்னார். அவர்கள்தான் எப்படிக் குழந்தைகளைக் கவனிக்கப் போகிறார்கள்? இந்த மசோதா நன்றாகப் பரிசீலனை செய்யப்பட்டுத் தயாரிக்கப்பட்டது. இந்தச் சட்ட சபையில் பிரேரேபிக்கப்பட்டு இரண்டு சபைகளின் பிரதிநிதிகள் அடங்கிய ஜாயிண்ட் செலெக்ட் கமிட்டியினிடம் ஒப்புவிக்கப்பட்டு அந்தக் கமிட்டி ரொம்ப கவனத்துடன் பல நாட்கள் ஆலோசித்த பிறகு ஒவ்வொரு பிரிவாகப் பரிசீலனை செய்துதான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறார்கள். இருந்தாலும் அந்த செலெக்ட் கமிட்டியில் இல்லாத கனம் அங்கத்தினர் ஸ்ரீ பாலசுப்ரமணிய அய்யர் அவர்கள் போன்றவர்கள் ஏதோ சில திருத்தங்கள் செய்ய வேண்டும் என்று அவர்களுக்குப் பட்டுத் திருத்தங்கள் கொண்டுவந்தா.ல், அந்தத் திருத்தங்களை ஒப்புக்கொள்ளுவதில்லை என்ற சித்தாந்தம் ஒன்றுமில்லை. என்னைப் பொறுத்த மட்டில் ஒப்புக்கொள்ளக்கூடிய திருத்தம் ஏதாவது பிரேரேபிக்கப்பட்டால், அதை நான் நிச்சயமாக ஒப்புக்கொள்வேன். எனக்கு இதில் ஒரு சிரமமும் இல்லை. ஏனென்றால் சட்ட சபை இந்த மாதக் கடைசி வரையில் நடக்கப் போகிறது. இங்கே ஏதாவது திருத்தங்கள் கொண்டுவந்து நிறைவேற்றினாலும் மீண்டும் அந்தச் சபைக்குப் போய் அதனுடைய அங்கீகாரத்தையும் வாங்கி வருவதில் சிரமம் இல்லை. ஆகவே திருத்தங்கள் ஒன்றையும் ஒப்புக்கொள்ளக்கூடாது என்ற பிடிவாதம் இல்லை.

குழந்தைகள் பிச்சை எடுப்பதுபற்றியும் கடன் வாங்கக்கூடாது என்பது பற்றியும், அதற்குத் தடை இருக்கிறது என்பதைப்பற்றியும் கனம் அங்கத்தினர்கள் பேசினார்கள். இந்த மசோதாவில் குழந்தைகள் பிச்சை எடுப்பதைக் குற்றமாகக் கருதவில்லை. அது "ப்ரிவென்ஷன் ஆப் பெக்கிங் ஆக்ட்" இல் வருகிறது. இந்த மசோதாவில் "**Employing children and young persons for begging**" என்று இருக்கிறது. அதாவது பிச்சை எடுப்பதற்கு யார் குழந்ன.தகளைத் தங்களுக்குக் கருவியாக உபயோகப்படுத்திக்கொள்ளுகிறார்களோ அவர்களைத்தான் தண்டிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

குழந்தைகள் கடன் வாங்குவதுகூடத் தப்பா என்று சில கனம் அங்கத்தினர்கள் கேட்டார்கள். குழந்தைகள் கடன் வாங்குவதைக் குற்றம் என்று சொல்வது தவறுதான். இந்த மசோதாவில் "**Inciting child or young person to bet or borrow**" என்றுதான் இருக்கிறது. எவ்வளவு வேண்டுமானாலும் கடன் வாங்கிக்கொள்ளட்டும், அதைத் திருப்பிக் கொடுக்கட்டும். ஆனால் ஏன் குழந்தைகளை மற்றவர்கள் இதற்கு உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டும்? தான் கடன் வாங்குவதற்காகக்

[Sri M. Bhaktavatsalam] [10th September 1958

குழந்தைகளை உபயோகப்படுத்துவதுதான் பெரிய குற்றமாகக் கருதப்படு கிறது. அற்குத்தான் தண்டனை. குழந்தைகள் கடன் வாங்குவதில்லை. இந்த மசோதாவின் அடிப்படையே அதுதான். குழந்தைகளைப் பிச்சை எடுக்கவோ, மற்ற தீயக் காரியங்களைச் செய்யவோ பயன்படுத்துகிறுர்களே அவர்களைத் தண்டிக்க வேண்டுமென்பதுதான் இந்த மசோதாவின் அடிப் படை.

இப்படிப்பட்ட குழந்தைகளை இரண்டு விதமாகப் பிரிக்கலாம். சூழ் நிலை காரணமாகக் குற்றம் செய்யக்கூடிய குழந்தைகள் இருக்கிறுர்கள். ஆனுல் திக்கற்றவர்கள் இருக்கிறுர்களே அவர்களுக்கும் சூழ்நிலைதான் காரணம். அது குழந்தைகளுடைய பொறுப்பு அல்ல. இவர்களைத் தனித் தனியாக வைத்துப்பராமரிக்க வேண்டுமென்ற அடிப்படையான கொள்கையை அரசாங்கம் ஒத்துக்கொண்டிருக்கிறது. அந்த வகையில் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியது அவசியம். இந்த மசோதாவில் அதைப்பற்றிக் குறிப் பிடவில்லை என்றுலும், சாதாரணமாகக் குற்றம் செய்கிறவர்கள், தொத்து வியாதி உள்ளவர்கள் இப்படிப்பட்டவர்களைத் தனித்தனியாக "ஹோமில்" வைப்பது என்று இந்த மசோதாவில் இருப்பதைக் கனம் அங்கத் தினர்கள் கவனித்திருப்பார்கள். "சர்ட்டிபைட் ஸ்கூல்" கட்டப்படுகிறது என்று பொதுவாகச் சொல்வதில் பயன் இல்லை. கனம் அங்கத்தினர் ஸ்ரீ நல்லசாமி அவர்கள் தம்முடைய சிறை அனுபவத்தைப்பற்றிச் சொன் ஞர்கள். நான் சொல்லுகிறேன், அவருக்குச் சிறைவாச அனுபவம்தான் இருக்கிறது, சர்ட்டிபைட் ஸ்கூலிலே அனுபவம் இருந்ததாக நான் நினைக்க வில்லை. அவருக்கு "சர்ட்டிபைட் ஸ்கூல்" அனுபவம் இருந்ததில்லை. ஆகவே இது இரண்டையும் ஒரே மாதிரியாகச் சொல்வதில் பயனில்லை. சர்ட்டிபைட் ஸ்கூலிலிருந்து வருகின்ற குழந்தைகள் திருந்திக்கொண்டு தான் வருகிறுர்கள், அங்கு இருப்பதால் கெட்டுப்போகிறுர்கள் என்று பொதுவாகச் சொல்வதில் பயனில்லை.

SRI B. K. NALLASWAMI : நான் முதல் குற்றவாளிகளைப் பற்றிக் குறிப்பிட்டேன்.

